No. of Printed Pages : 16

1124478

**5653**

பதிவு எண்
Register Number

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | |

# PART - III

# வரலாறு / HISTORY

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Versions)

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

Time Allowed : 3 Hours ] [Maximum Marks : 200

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கறுப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use Black or Blue ink to write and pencil to draw diagrams.

## பகுதி - அ / PART - A

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. **45x1=45**

(ii) ஒவ்வொரு வினாவிற்கும் ஒரு மதிப்பெண்

**Note :** (i) Answer **all** the questions.

(ii) One mark for each question.

**I.** **சரியான** விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் எழுதுக.

Choose the **correct** answers.

1. இரண்டாம் மைசூர் போரை முடிவுக்கு கொண்டு வந்த உடன்படிக்கை :

(அ) சால்பாய் (ஆ) மங்களூர் (இ) புரந்தர் (ஈ) மைசூர்

The Second Mysore War came to an end by the Treaty of :

(a) Salbai (b) Mangalore (c) Purander (d) Mysore

[ திருப்புக / Turn over

2. 1798 வெல்லெஸ்ஸி பிரபுவின் துணைப்படைத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட முதல் நாடு :

(அ) அயோத்தி (ஆ) தஞ்சாவூர்

(இ) சூரத் (ஈ) ஹைதராபாத்

The first state which was brought under Wellesley's Subsidiary system in 1798 was :

(a) Oudh (b) Tanjore

(c) Surat (d) Hyderabad

3. 'சதி' வழக்கம் இவரது ஆட்சிக் காலத்தில் ஒழிக்கப்பட்டது :

(அ) வாரன்ஹேஸ்டிங்ஸ் (ஆ) காரன்வாலிஸ் பிரபு

(இ) வெல்லெஸ்லி பிரபு (ஈ) வில்லியம் பெண்டிங் பிரபு

The practice of Sati was abolished during the administration of :

(a) Warren Hastings (b) Lord Cornwallis

(c) Lord Wellesley (d) Lord William Bentinck

4. பம்பாய் - தாணாவை இணைத்த முதல் ரயில்பாதை திறக்கப்பட்ட ஆண்டு :

(அ) 1853 (ஆ) 1856 (இ) 1857 (ஈ) 1858

The first railway line between Bombay and Thane was laid down in the year :

(a) 1853 (b) 1856 (c) 1857 (d) 1858

5. நிலையான நிலவரித் திட்டத்தை அறிமுகப்படுத்தியவர் :

(அ) காரன் வாலிஸ் பிரபு (ஆ) வெல்லெஸ்லி பிரபு

(இ) வில்லியம் பெண்டிங் பிரபு (ஈ) டல்ஹவுசி பிரபு

The Permanent Settlement was introduced by :

(a) Lord Cornwallis (b) Lord Wellesley

(c) Lord William Bentinck (d) Lord Dalhousie

6. விதவைகள் மறுமண சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு :

(அ) 1846 (ஆ) 1856 (இ) 1870 (ஈ) 1891

The Widow Remarriage Act was passed in the year :

(a) 1846 (b) 1856 (c) 1870 (d) 1891

7. கலெக்டர் ஜாக்சன் கட்டபொம்மனை வந்து சந்திக்க சொன்ன இடம் :

(அ) மதுரை (ஆ) பாஞ்சாலங்குறிச்சி

(இ) இராமநாதபுரம் (ஈ) ஸ்ரீவில்லிபுத்தூர்

Collector Jackson sent an order to Kattabomman to meet him at :

(a) Madurai (b) Panchalam Kuruchi

(c) Ramanathapuram (d) Srivilliputtur

8. பின்வருபவர்களில் 1857-ஆம் ஆண்டு கலகத்தை முதல் இந்திய விடுதலை போர் என்று கருதியவர் யார் ?

(அ) சர் ஜான் லாரன்ஸ் (ஆ) வீர சவார்க்கர்

(இ) எஸ்.என். சென் (ஈ) ஆர்.சி. மஜூம்தார்

Who among the following considered the Revolt of 1857 as the First War of Indian Independence ?

(a) Sir John Lawrence (b) Vir Savarkar

(c) S.N. Sen (d) R.C. Majumdar

9. நாட்டு மொழி செய்தித்தாள் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு எது ?

(அ) 1878 (ஆ) 1882 (இ) 1898 (ஈ) 1902

In which year the Vernacular Press Act was passed ?

(a) 1878 (b) 1882 (c) 1898 (d) 1902

10. பின் வருபவர்களில் அலிகார் இயக்கத்தை தொடங்கியவர் யார் ?

(அ) சர் சையது அகமது கான் (ஆ) சலிமுல்லா கான்

(இ) முகமது அலி ஜின்னா (ஈ) முகமது அல் - ஹாசன்

Who among the following started the Aligarh Movement ?

(a) Sir Syed Ahmed Khan (b) Salimullah Khan

(c) Muhammed Ali Jinnah (d) Muhammad al Hasan

11. இந்திய தேசிய காங்கிரஸை தோற்றுவித்தவர் :

(அ) டபிள்யூ.சி. பானர்ஜி (ஆ) ஏ.ஓ. ஹியூம்

(இ) மகாத்மா காந்தி (ஈ) நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்

The Indian National Congress was founded by :

(a) W.C. Banerjee (b) A.O. Hume

(c) Mahatma Gandhi (d) Netaji Subhash Chandra Bose

[ திருப்புக / Turn over

12. காந்தியின் அரசியல் குருவாகக் கருதப்பட்டவர் :

(அ) எஸ்.என். பானர்ஜி (ஆ) கோபால கிருஷ்ண கோகலே

(இ) பால கங்காதர திலகர் (ஈ) பிபின் சந்திர பால்

The political guru of Gandhiji was :

(a) S.N. Banerjee (b) Gopala Krishna Gokhale

(c) Bal Gangadhar Tilak (d) Bipin Chandra Pal

13. முஸ்லீம் லீக் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு :

(அ) 1906 (ஆ) 1909 (இ) 1916 (ஈ) 1926

The muslim league was founded in :

(a) 1906 (b) 1909 (c) 1916 (d) 1926

14. கேடா சத்யாகிரகத்தை காந்தி யாரை ஆதரிப்பதற்காகத் தொடங்கினார் :

(அ) அவுரிப் பண்ணையாளர்கள்

(ஆ) ஆலைத் தொழிலாளர்கள்

(இ) குடியானவர்கள்

(ஈ) தொழிற்சாலை பணியாளர்கள்

The Kheda Satyagraha was launched by Gandhi in support of :

(a) Indigo Planters

(b) Industrial Labourers

(c) Peasants

(d) Mill Workers

15. இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாட்டில் முதல் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் ?

(அ) சீனுவாச பிள்ளை (ஆ) லட்சுமிநரசு செட்டி

(இ) ரங்கைய நாயுடு (ஈ) ஜி. சுப்ரமணிய அய்யர்

Who among the following moved the first resolution in the first session of the Indian National Congress ?

(a) Srinivasa Pillai (b) Lakshminarasu Chetty

(c) Rangaiya Naidu (d) G. Subramaniya Iyer

16. தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு :

(அ) 1912 (ஆ) 1914 (இ) 1916 (ஈ) 1917

The South Indian Liberal Foundation was formed in the year :

(a) 1912 (b) 1914 (c) 1916 (d) 1917

17. முதலாவது இந்திய தொழில்நுட்ப கழகம் துவங்கப்பட்ட இடம் :

(அ) கான்பூர் (ஆ) பம்பாய்

(இ) சென்னை (ஈ) கோரக்பூர்

The first Indian Institute of Technology was set up at :

(a) Kanpur (b) Bombay

(c) Madras (d) Kharagpur

18. சமய சீர்திருத்த இயக்கத்தின் விடிவெள்ளி எனக் கருதப்படுபவர் :

(அ) எராஸ்மஸ் (ஆ) மார்ட்டின் லூதர்

(இ) ஜான் ஹஸ் (ஈ) ஜான் வைக்ளிப்

Who is considered as the "Morning Star of the Reformation" ?

(a) Erasmus (b) Martin Luther

(c) John Huss (d) John Wycliffe

19. "சமூக ஒப்பந்தம்" என்ற நூலின் ஆசிரியர் :

(அ) மாண்டஸ்கியூ (ஆ) வால்டேர்

(இ) ரூசோ (ஈ) ஜேக்கஸ் நெக்கர்

Who was the author of the book "Social Contract" ?

(a) Montesquieu (b) Voltaire

(c) Rousseau (d) Jacques Necker

20. ஐ.நா. சபையின் தலைமையிடம் அமைந்துள்ளது :

(அ) ஜெனிவா (ஆ) தி ஹேக்

(இ) நியூயார்க் (ஈ) சான் பிரான்சிஸ்கோ

The headquarters of the United Nations is located in :

(a) Geneva (b) The Hague

(c) New York (d) San Francisco

II. பின்வரும் வாக்கியங்களில் உள்ள கோடிட்ட இடங்களை சரியான விடைகளைக் கொண்டு நிரப்புக :

Fill in the blanks with suitable answers :

21. சிந்தியா பிரிட்டிஷாருடன் செய்து கொண்ட துணைப்படைத் திட்ட உடன்படிக்கை பெயர் ________.

The Subsidiary treaty signed by Scindia with the British is known as ________.

22. நவீன அஞ்சல் முறையை தொடங்கி வைத்தவர் ________.

The foundation of Modern Postal System was laid down by ________.

23. பேரரசியின் அறிக்கையை கானிங் பிரபு ________ என்னும் இடத்தில் படித்தார்.

The Queen's Proclamation was read by Lord Canning at ________.

24. 1875-ஆம் ஆண்டு பம்பாயில் சுவாமி தயானந்த சரஸ்வதி ________ ஐ தோற்றுவித்தார்.

________ was founded by Swami Dayanand Saraswati at Bombay in 1875.

25. பாரதமாதா சங்கத்தை தோற்றுவித்தவர் ________.

Bharathamatha Association was started by ________.

26. 'முழுச் சுதந்திரம்' பற்றிய தீர்மானம் இயற்றப்பட்ட இடம் ________.

The 'Poorna Swaraj' Resolution was passed at ________.

27. இந்தியாவின் 'இரும்பு மனிதர்' ________.

'The Iron Man of India' was ________.

28. இந்து சமய அறநிலைய சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு ________.

The Hindu Religious Act was passed in the year ________.

29. தொலைநோக்கியைக் கண்டறிந்தவர் ________.

Telescope was invented by ________.

30. ''பிரதிநிதித்துவம் இல்லையேல் வரியில்லை'' என்ற முழக்கம் ________ நடைபெற்ற புரட்சியின் போது எழுப்பப்பட்டது.

"No Taxation without Representation" was the slogan of revolution in ________.

**III.** நிரல் **'அ'** வின் கீழ் உள்ளவற்றை நிரல் **'ஆ'** உடன் பொருத்துக.

| 'அ' | | 'ஆ' |
|---|---|---|
| **31.** சர் வில்லியம் சீலிமேன் | (அ) | ரபேல் |
| **32.** நிரங்காரி இயக்கம் | (ஆ) | ஐ.எஸ்.ஆர்.ஓ. (இஸ்ரோ) |
| **33.** விக்ரம் சாராபாய் | (இ) | கார்ட் ரைட் |
| **34.** மடோன்னா | (ஈ) | தக்கர்கள் |
| **35.** விசைத்தறி | (உ) | பாபா தயாள் |

Match the following items in **'A'** suitably with those in **'B'** :

| 'A' | | 'B' |
|---|---|---|
| **31.** Sir William Sleeman | (a) | Raphael |
| **32.** Nirankari Movement | (b) | ISRO |
| **33.** Vikram Sarabhai | (c) | Cart Wright |
| **34.** Madonna | (d) | Thugs |
| **35.** Power Loom | (e) | Baba Dayal |

**IV.** **சரியான** குறிப்பைக் கண்டறிக. ஒன்று மட்டுமே சரியானது.
Find out the **correct** statement. One statement alone is correct.

**36.** (அ) திப்புசுல்தான் பிரெஞ்சுக்காரர்களிடம் ஸ்ரீரங்கபட்டணம் உடன்படிக்கையை செய்து கொண்டார்.
(ஆ) தரோகா என்பவர் ஒரு வருவாய் அதிகாரி
(இ) மூன்றாம் ஆங்கிலேய - மைசூர் போர் ஹைதர் அலி மறைந்த பிறகு நடைபெற்றது.
(ஈ) காரன்வாலிஸ் பிரபு ஆட்சிக்காலத்தில் குற்றவியல் வழக்குகளில் இந்து சட்டம் பின்பற்றப்பட்டது.
(a) Tipu Sultan concluded the Treaty of Sriranga Pattanam with the French.
(b) Daroga was a revenue official.
(c) The Third Anglo-Mysore War took place after the death of Hyder Ali.
(d) During the time of Lord Cornwallis Hindu Law was followed in criminal cases.

**37.** (அ) 1815-ல் சுவாமி தயானந்த சரஸ்வதி ஆத்மிய சபையை நிறுவினார்.
(ஆ) இராஜாராம் மோகன்ராய் வங்காளத்தின் முதல் வார இதழான சம்வாத்கௌமுதி துவக்கினார்.
(இ) இளம் வங்காள இயக்கத்தை தோற்றுவித்தவர் ரவிந்திரநாத் தாகூர் ஆவார்.
(ஈ) 1867-ல் பம்பாயில் பிரார்த்தனை சமாஜம் நிறுவப்பட்டது.
(a) In 1815 Dayanand Saraswathi established the Atmiya Sabha.
(b) Ram Mohan Roy started the First Bengali Weekly Samvad Kaumudi.
(c) Rabindranath Tagore was the founder of the Young Bengal Movement.
(d) The Prarthana Samaj was founded in 1867 in Bombay.

38. (அ) 1800 ஆண்டுகளுக்கு முன் தமிழகம் என்ற நூலை எழுதியவர் சி.வி. தாமோதரம் பிள்ளை

(ஆ) சென்னை திராவிடர் கழகம் நவம்பர் 1912-ல் துவக்கப்பட்டது.

(இ) 1917-ல் தென்னிந்திய முற்போக்கு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

(ஈ) தமிழ் செய்தித்தாளான ஜஸ்டிஸ் நீதிக்கட்சியை ஆதரித்தது.

(a) C.V. Damodaram Pillai was the author of 'The Tamils' 1800 years ago.

(b) Madras Dravidian Association was started in November 1912.

(c) In 1917 the South Indian Liberal Federation was formed.

(d) Tamil newspaper called Justice supported the Justice Party.

39. (அ) ரஷ்யாவில் பிப்ரவரி புரட்சிக்கு தலைமையேற்றவர் லெனின்.

(ஆ) மென்ஷ்விக் அரசாங்கம் கெரன்ஸ்கி தலைமையில் அமைக்கப்பட்டது.

(இ) போல்ஷ்விக் கட்சி மிதவாத அரசியல் இயக்கமாகும்.

(ஈ) இரண்டாம் சார் நிக்கோலஸ் மென்ஷ்விக்குகளை ஆதரித்தார்.

(a) The February revolution in Russia was led by Lenin.

(b) The Menshevik government was led by Kerensky.

(c) The Bolshevik Party was a moderate political force.

(d) Tsar Nicholas II supported the Mensheviks.

40. (அ) செப்டம்பர் 1, 1940-ல் ஹிட்லர் போலந்தின் மீது படையெடுத்தார்.

(ஆ) டிசம்பர் 1941-ல் ஜப்பான் பெர்ல் துறைமுகத்தை தாக்கியது.

(இ) செப்டம்பர் 1945-ல் இத்தாலி சரணடைந்தது.

(ஈ) மே 2, 1944-ல் ரஷ்ய துருப்புகள் பெர்லின் நகரில் நுழைந்தன.

(a) Hitler invaded Poland on September 1, 1940.

(b) In December 1941, Japan attacked the Pearl Harbour

(c) In September 1945, Italy surrendered.

(d) On 2 May 1944, Russian army entered Berlin.

V. கீழ்க்காணும் கூற்றுகளில் **எது சரி, எது தவறு** என்பதனைக் குறிப்பிடுக.
State whether the following statements are **True** or **False.**

41. கல்கத்தா இந்து கல்லூரியை ஹேஸ்டிங்ஸ் பிரபு ஆதரித்தார்.
Lord Hastings was the Patron of Hindu College at Calcutta.

42. இரண்டாம் பகதூர்ஷா கைது செய்யப்பட்டு ரங்கூனுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.
Emperor Bahadur Shah II was arrested and deported to Rangoon.

43. 1919-ஆம் ஆண்டு சட்டப்படி லண்டனில் இந்தியாவிற்கான உயர் ஆணையர் நியமிக்கப்பட்டார்.
The Act of 1919 appointed a High Commissioner for India at London.

44. அச்சு இயந்திரத்தை முதலில் கண்டறிந்தவர் வில்லியம் காக்ஸ்டன்.
The Printing Press was first invented by William Caxton.

45. 1814-ல் ஜான் ஸ்மீடன் முதலாவது ரயில் எஞ்ஜினை வடிவமைத்தார்.
John Smeaton constructed the first practical Locomotive in 1814.

## பகுதி - ஆ / PART - B

VI. குறிப்புகள் : (i) ஏதேனும் **பதினைந்து** வினாக்களுக்கு மட்டும் சிறு குறிப்பு வரைக. **15x3=45**
(ii) ஒவ்வொன்றிற்கும் **மூன்று** குறிப்புகள் அளித்தல் வேண்டும்.

Note : (i) Write short notes on any **fifteen** of the following.
(ii) Write only **three** points for each.

46. ரோகில்லா போர்
Rohilla War

47. பசீன் உடன்படிக்கை
Treaty of Bassein

48. இரஞ்சித் சிங்
Ranjit Singh

49. வுட் அறிக்கை
Wood's Despatch

50. மகல்வாரி முறை
Mahalwari Settlement

51. பர்தா முறை
Purdah System

52. புலித் தேவர்
Puli Thevar

53. சர் ஜான் கிரடாக்
Sir John Cradock

54. ராணி லட்சுமி பாய்
Rani Lakshmi Bai

55. இல்பர்ட் மசோதா சர்ச்சை
Ilbert Bill controversy

56. சுவாமி விவேகானந்தர்
Swami Vivekananda

57. இந்திய தேசிய காங்கிரஸ்
Indian National Congress

58. பஞ்சசீலம்
Panchsheel

59. சுப்ரமணிய பாரதி
Subramaniya Bharathi

60. ஐ எஸ் ஆர் ஓ (இஸ்ரோ)
I S R O

61. மறுமலர்ச்சியின் பொருள்
Meaning of Renaissance

62. இயேசு சபை
Society of Jesus

63. ஜான் மெக்காடம்
John McAdam

64. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு
International Labour Organisation

65. கெடுபிடிப் போர்
Cold War

## பகுதி - இ / PART - C

**VII. குறிப்பு :** (i) பின்வருவனவற்றில் ஏதேனும் **பத்து** வினாக்களுக்கு மட்டும் விடை தருக. அவற்றில் வினா எண் 77-க்கு **கட்டாயமாக** விடையளித்தல் வேண்டும். **10x6=60**

(ii) ஒவ்வொரு வினாவிற்கும் **100** வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

**Note :** (i) Answer any **ten** questions of the following including question no.77, which is **compulsory.**

(ii) Answer in not more than **100** words each.

**66.** (அ) மூன்றாம் மைசூர் போருக்கான காரணங்களை விவரிக்க.

**அல்லது**

(ஆ) துணைப்படைத் திட்டத்தின் முக்கிய கூறுகளைக் குறிப்பிடுக.

(a) Discuss the causes for the Third Mysore War.

**OR**

(b) Point out the main features of the Subsidiary system.

**67.** (அ) மராட்டிய கூட்டிணைவின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

**அல்லது**

(ஆ) 1833-ஆம் ஆண்டு பட்டயச் சட்டத்தின் முக்கிய பிரிவுகளை விவரிக்க

(a) Mention the causes for the downfall of Maratha confederacy.

**OR**

(b) Discuss the important provisions of the Charter Act of 1833.

**68.** (அ) நிலையான நிலவரித் திட்டத்தின் சிறப்புக் கூறுகளை குறிப்பிடுக.

**அல்லது**

(ஆ) பிரிட்டிஷாரின் கல்விக் கொள்கையை ஆய்க.

(a) Point out the salient features of Permanent Land Revenue Settlement.

**OR**

(b) Examine the educational policy of the British.

69. (அ) 1801-ஆம் ஆண்டு தென்னிந்திய கலகத்தைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.

**அல்லது**

(ஆ) 1857-ஆம் ஆண்டு கலகத்தின் விளைவுகள் யாவை ?

(a) Write a note on South Indian Rebellion of 1801.

**OR**

(b) Analyse the results of the Great Revolt of 1857.

70. (அ) சமூக நீதிக்காக பெரியார் ஈ.வெ.ரா. ஆற்றிய பணிகள்.

**அல்லது**

(ஆ) உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியத்துவத்தைப் பற்றி விவாதிக்க.

(a) The efforts rendered by Periyar E.V.R. for Social Justice.

**OR**

(b) Discuss the importance of Local Self Government.

71. (அ) இந்திய தேசிய இயக்கத்தில் தீவிரவாதம் தோன்றியது பற்றி குறிப்பு வரைக.

**அல்லது**

(ஆ) ஜாலியன் வாலாபாக் படுகொலை பற்றி குறிப்பு எழுதுக.

(a) Write a note on the rise of extremism in the Indian National Movement.

**OR**

(b) Write a note on the Jallianwala Bagh Massacre.

72. (அ) தேசிய இயக்கத்தில் காமராஜரின் பங்கினைப் பற்றி விவாதிக்கவும்.

**அல்லது**

(ஆ) இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளைப் பற்றி விவாதிக்கவும்.

(a) Discuss the role of Kamaraj in the National Movement.

**OR**

(b) Discuss the salient features of the Indian Constitution.

73. (அ) 1861-ஆம் ஆண்டு இந்திய கவுன்சில்கள் சட்டத்தின் பிரிவுகளை விவரி.

**அல்லது**

(ஆ) இந்திய அயலுறவுக் கொள்கையின் முக்கிய கூறுகளைப் பற்றி எழுதுக.

(a) Discuss the provisions of the Indian Councils Act of 1861.

**OR**

(b) Mention the important features of India's Foreign Policy.

74. (அ) இத்தாலியில் மறுமலர்ச்சி தோன்றியதற்கான காரணங்களைக் கூறுக.

**அல்லது**

(ஆ) சமய சீர்திருத்த இயக்கத்தில் ஜான் கால்வினின் பங்கினை விவாதிக்கவும்.

(a) Discuss the causes for the birth of Renaissance in Italy.

**OR**

(b) Discuss the role of John Calvin in the Reformation.

75. (அ) புவியியல் கண்டுபிடிப்புகளுக்கான காரணங்களை ஆய்க.

**அல்லது**

(ஆ) அமெரிக்க விடுதலைப் போருக்கான அடிப்படைக் காரணங்களை ஆய்க.

(a) Analyse the causes for the geographical discoveries.

**OR**

(b) Analyse the fundamental causes for the American War of Independence.

76. (அ) ரஷ்யப் புரட்சியில் லெனினின் பங்கினைக் குறித்து விவாதி.

**அல்லது**

(ஆ) ஹிட்லரின் அயல்நாட்டுக் கொள்கையை விவாதி.

(a) Discuss the role of Lenin in the Russian Revolution.

**OR**

(b) Discuss the foreign policy of Hitler.

77. (அ) ஐ.நா. சபையின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

**அல்லது**

(ஆ) அணு ஆயுதப்பரவல் தடை சட்டத்தின் முக்கியக் கூறுகளைக் கூறுக.

(a) State the aims of UNO.

**OR**

(b) State the main features of the Nuclear Non-Proliferation Treaty.

## பகுதி - ஈ / PART - D

VIII. குறிப்பு : (i) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக. அவற்றுள் வினா எண் 84-க்கு **கட்டாயமாக** விடை தருதல் வேண்டும்.

**5x10=50**

(ii) ஒவ்வொரு வினாவிற்கும் **200** வார்த்தைகளுக்கு மிகாமல் விடை தருக.

**Note :** (i) Answer any **five** questions including Q.No. **84** which is **compulsory.**

(ii) Answer should not exceed **200** words each.

**78.** (அ) ''காரன்வாலிஸ் பிரபுவின் வாழ்க்கை, கடமையும் தியாகமும் நிறைந்தது'' - கருத்துரைக்க.

**அல்லது**

(ஆ) பெண்டிங் பிரபு சமூக சீர்திருத்தங்கள் காலத்தை தொடங்கி வைத்தார் - கருத்து கூறுக.

(a) "Lord Cornwallis's life was embodiment of duty and sacrifice." Justify.

**OR**

(b) "Bentinck inaugurated an era of social reforms." Comment.

**79.** (அ) 1857-ஆம் ஆண்டு கலகத்துக்கான காரணங்களை ஆய்க.

**அல்லது**

(ஆ) ரிப்பன் பிரபுவின் சீர்திருத்தங்களை மதிப்பிடுக.

(a) Examine the causes for the Revolt of 1857.

**OR**

(b) Estimate the reforms of Lord Ripon.

80. (அ) 1919 முதல் 1935 வரை இந்திய விடுதலை இயக்கத்தின் முக்கிய நிகழ்வுகளைப் பற்றி விவரி.

**அல்லது**

(ஆ) விடுதலை இயக்கத்தில் தமிழ்நாட்டின் பங்கினை ஆய்க.

(a) Discuss the important events of the Freedom Movement from 1919 to 1935.

**OR**

(b) Examine the role of Tamil Nadu in the Indian Freedom Struggle.

81. (அ) இந்தியாவின் அரசியலமைப்பு முறையில் 1935-ஆம் ஆண்டு இந்திய அரசு சட்டம் முக்கிய மாறுதல்களை கொண்டு வந்தது - கருத்து கூறுக.

**அல்லது**

(ஆ) ''ஜவஹர்லால் நேரு நவீன இந்தியாவின் சிற்பி'' எனக் கருதப்படுகிறார் - கருத்துக் கூறுக.

(a) The Government of India Act of 1935 introduced significant changes in the Constitutional System of India. Comment.

**OR**

(b) "Jawaharlal Nehru is the Architect of Modern India." Discuss.

82. (அ) 1789 -ஆம் ஆண்டு பிரஞ்சுப் புரட்சிக்கான காரணங்களை ஆய்க.

**அல்லது**

(ஆ) தொழிற் புரட்சியின் நன்மை தீமைகளை ஆய்க.

(a) Examine the causes of the French Revolution of 1789.

**OR**

(b) Analyse the merits and demerits of the Industrial Revolution.

83. (அ) முதல் உலக போருக்கான பல்வேறு காரணங்களைக் கூறுக.

**அல்லது**

(ஆ) உலக அமைதியைக் காப்பதில் ஐ.நா. சபையின் பங்கினை மதிப்பிடுக.

(a) Enumerate the various causes of the First World War.

**OR**

(b) Estimate the role of U.N.O. in maintaining the world peace.

84. (அ) (i) இந்திய வரைப்படத்தில் கீழ்கண்ட இடங்களைக் குறிக்கவும்.
(அ) மைசூர்
(ஆ) ஹைதராபாத்
(இ) சதாரா
(ஈ) ஜான்சி
(உ) டெல்லி
(ii) டல்ஹௌசி பிரபுவின் கீழ் இருந்த ஆங்கில பேரரசினை வரைக.

**அல்லது**

(ஆ) 1900 முதல் 1950 வரை நடைபெற்ற இந்திய விடுதலை போர் நிகழ்ச்சிகளில் ஐந்தினை காலக்கோடு காட்டி வரைக.

**அல்லது**

(இ) முதல் உலகப்போரின் முக்கிய ஐந்து நிகழ்வுகளைக் குறிக்கும் காலக்கோட்டினை வரைக.

(a) (i) Mark the following five places in the outline Map of India.
(A) Mysore
(B) Hyderabad
(C) Satara
(D) Jhansi
(E) Delhi
(ii) Point out the British possessions under Lord Dalhousie.

**OR**

(b) Draw a time-line for the freedom movement from 1900 to 1950, pointing out five important events of that period.

**OR**

(c) Draw a time-line of the First World War pointing five important events of that war.

- o O o -